# நகர புதுப்பிப்புச் சட்டம் : பணிக்குழு அமைக்கிறது டி.பி.கே.எல்.

பெட்டாலிங் ஜெயா, ஜூன் 12-

உத்தேச நகர புதுப்பிப்புச் சட்டம் (உரா) அமலுக்கு வந்தவுடன் நகர மேம்பாட்டில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழி காட்ட கோலாலம்பூர் மாநகர மன்றம் (டி.பி.கே.எல்.) ஒரு பணிக்குழுவை அமைக்கும் என்று கோலாலம்பூர் மேயர் மைமுனா ஷாரிஃப் கூறுகிறார்.

உத்தேச திட்டத்தை பணிக்கு ஆய்வு செய்து, மறு மேம்பாட்டுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட டி.பி.கே.எல். ஆதரவு சொத்து உரிமையாளர்களுக்கு உதவும் என்று அவர் கூறியதாக தி ஏட்ஜ் தெரிவித்தது.




நகர மறுமேம்பாடு தொடர்பான விவகாரங்களில் சொத்து உரிமையாளர்களுக்கு உதவும் வகையில் டிபிகேஎல் நல்ல தயார் நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தவே இந்த பணிக்குழு என்று அவர் குறிப்பிட்டார்.

சொத்துடைமை மற்றும் வீடமைப்பு மேம்பாட்டாளர்கள் சங்கத்தால் (ரேடா) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

உத்தேச உரா சட்டம் வீடமைப்பு, உள்ளாட்சி அமைச்சின் முயற்சியால் கொண்டுவரப்பட உள்ளது.